[2006 ஆகஸ்ட் 22

(முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

திரு. சி.வி. சண்முகம்: இச்சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே நாங்கள் எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய எதிர்ப்பு பதிவு செய்யப்படுகிறது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)

2006 ஆகஸ்ட் 22]

திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய எதிர்ப்பைப் பதிவு செய்தாகிவிட்டது. சண்முகம், சும்மாக் கூச்சலிடாதீர்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* சும்மாக் குதிக்காதீர்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். பேச முடியாது. *(குறுக்கீடுகள்)* என்ன, சொல்லுங்கள்?

***திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவைக் கொண்டு வருவதற்கு முன்னால், எங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும். ஆனால், பேரவைத் தலைவர் அவர்கள், உங்கள் எதிர்ப்பு முடிந்து போய்விட்டது என்று சொன்னால், இது என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆமாம், உங்கள் எதிர்ப்பைப் பதிந்தாகிவிட்டது. *(குறுக்கீடுகள்)*

2006–2007 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* உங்களுடைய எதிர்ப்பைப் பதிவு செய்ததற்குப் பிறகு திரும்பவும் நின்று பேச உங்களுக்கு உரிமை இல்லை. உட்காருங்கள். அமைச்சர், நீங்கள் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* ஆய்வு செய்யும்போது பேசிக்கொள்ளலாம். உட்காருங்கள்.

6. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 45 – சமூக நலன் மற்றும் சத்துணவுத்திட்டத் துறை

(ஆ) கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை– கால்நடை பராமரிப்பு

(அ) கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)*